[3rd March 1964

கனம் திரு. எம். பக்தவத்சலம் : உள்ளூர் மக்கள் வேண்டிய நடவடிக்கை எடுத்துக்கொண்டால் மேலும் அரசாங்கம் கவனம் செலுத்தும்.

திரு. ம. கமலநாதன் : தலைவர் அவர்களே, மத்திய அரசாங்கத்தார் இந்தக் கட்டடங்கள் கட்டுவதற்காக பணம் கடனாக தருவதாக அமைச்சர் அவர்கள் . . .

கனம் சபாநாயகர் : முன் கேள்விக்குக் கனம் அங்கத்தினர் போய்விடுகிறார்.

SRI M. KAMALANATHAN : It is also concerned with high schools.

MR. SPEAKER : Then anything can be extended like that.

திரு. ம. கமலநாதன் : கடன் தவணை முறையில் கொடுக்கப்படும் என்று கருதுகிறேன். எவ்வளவு ஒதுக்கப்படும்? எவ்வளவு தவணைகளில் திருப்பிக் கட்டவேண்டும் என்ற நிலை இருக்கிறது ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : நாங்கள் கேட்டது, முப்பது ஆண்டுத் தவணைகளில் திருப்பிக் கொடுக்க அனுமதிக்கவேண்டும், வட்டியும் குறைவாக இருக்கவேண்டும் என்பது. எவ்வளவு கொடுக்கிறார்களோ அதை வைத்துக்கொண்டு நாம் மேற்கொண்டு எவ்வளவு கட்டடம் கட்ட முடியுமோ கட்டலாம்.

கனம் சபாநாயகர் : கேள்விகள் முடிவடைந்தன.

[*Note.*— **An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.**]

II. CALLING ATTENTION TO RETRENCHMENT OF EMPLOYEES BY THE MADRAS STATE ELECTRICITY BOARD.

திரு. து. ப. அழகமுத்து : தமிழ்நாடு மின்சார போர்டு, நிதி வசதிக் குறைவால் ஏராளமான ஊழியர்களை வேலையினின்று நீக்கிவிட்ட (ஆட்குறைப்பு) காரணத்தால் எழுந்த நிலைமை பற்றிய அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த விஷயத்தைக் கனம் கைத்தொழில் அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு நான் கொண்டு வருகிறேன்.

*THE HON. SRI R. VENKATARAMAN : Mr. Speaker, Sir, the Capital expenditure on Power Projects during 1963–64 was expected to be of the order of Rs. 20.5 crores, against which a provision of Rs. 9 crores has been made in the State Budget for this year under 'Loans and Advances by State Governments—Loans to State Electricity Board'. But the actual expenditure has exceeded the anticipated outlay and it had to be restricted to Rs. 28 crores. An additional sum of Rs. 8 crores has been provided in the Supplementary Estimates presented to the Legislature in January 1964. In view of the ever increasing demand for power, the tempo of works on power projects was stepped up and new schemes like the Kodayar Hydro-Electric Scheme and the

3rd March 1964] [Sri R. Venkataraman]

extensions at Basin Bridge Thermal station have also been taken up. In the result, it has become necessary to slow down some of the Rural Extension Works due to paucity of funds. Consequently, some employees have been retrenched as a temporary measure as indicated below :

(i) Vellore Electricity System.—180 workers were retrenched due to closure of three subdivisions.

(ii) Tiruchirappalli Electricity System.—89 workers from Operation Subordinate Service and Work Charged Establishment and 1,700 temporary casual labourers have been retrenched as a temporary measure.

(iii) Madurai Electricity System.—600 temporary casual labourers have been retrenched.

Reports from Mettur and Tirunelveli Electricity Systems and Kundah, Pegumbahallah and Kodayar circles are awaited. There has been no retrenchment of workers in other systems or circles.

The Madras State Electricity Board Employees' Union has made a representation to the State Electricity Board and the Government against the retrenchment of workers in the Electricity Systems. The State Electricity Board has issued instructions to all the Electricity Systems to the effect that retrenched workers who are eligible for leave should be granted leave and that they should be gradually re-employed in the order of their seniority when the deferred works are taken up again after April 1964. Instructions have, however, been issued that no avoidable hardship should be caused and before discharging workers, it is also being examined whether such surplus workers could be absorbed elsewhere. It is hoped that the retrenched workers will be taken back before long.

III.—GENERAL DISCUSSION ON THE BUDGET FOR 1964–65—*cont.*

MR. SPEAKER : Now the hon. member Sri K. S. Mani, will speak on the budget.

* **திரு. கோ. சி. மணி :** மன்றத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு நிதி நிலை அறிக்கையை நம்முடைய முதல் அமைச்சர் அவர்கள் இங்கே சமர்ப்பித்து, அதன் மீது விவாதங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. சென்ற ஆண்டு நிதி நிலை அறிக்கையைச் சமர்ப்பித்த நேரத்தில், நம்முடைய முதல் அமைச்சர் அவர்கள் நிதி அமைச்சராகவும் கல்வி அமைச்சராகவும் மட்டும் இருந்தார். இந்த ஆண்டு நிதி நிலை அறிக்கையைச் சமர்ப்பிக்கிற நேரத்தில், கல்வி அமைச்சராகவும் நிதி அமைச்சராகவும் முதல் அமைச்சராகவும் நல்ல உயர் பதவியிலே அவர்கள் இன்றையதினம் இருக்கிறார்கள். ஆனால், அவருடைய தரம் உயர்ந்திருக்கிற அளவுக்கு, அவருடைய பதவி உயர்ந்திருக்கிற அளவுக்கு அவர்கள் இங்கே சமர்ப்பித்திருக்கிற நிதி நிலை அறிக்கையினுடைய தரமும், பொது மக்கள் எதிர்பார்த்த அளவுக்கு நலனும் அதிலே காணப்படவில்லை என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.